1974 மார்ச் 30]

அரசினர் கல்லூரிகளில் வகுப்புகள் நடத்துவதற்கு இட வசதி

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடலூர், வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளில் வகுப்பு நடத்துவதற்கு இடம் போதவில்லை என்பது உண்மையா ?

(இ) சில பாடங்களுக்கு விரிவுரையாளர்கள் இல்லை என்பதும் உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) வேலூர் அரசினர் கலைக்கல்லூரியில் எல்லா வகுப்புகளுக்கும் போதுமான இடவசதி உள்ளது. கடலூர் அரசினர் கலைக்கல்லூரியில் தகுந்த இடவசதி செய்ய கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) காலி இடங்கள் அனைத்தும் இரண்டு கல்லூரிகளிலும் தற்பொழுது நிரப்பப்பட்டுள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அங்கே பேராசிரியர்கள் போதவில்லை என்ற பிரச்சினை இருக்கிறதே. அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்தத் துறைக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு இருந்தனரோ, அந்தந்தத் துறைக்கு இப்போது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். இடையில் சில திங்கள் காலியாக இருந்தன. காலியாக இருந்த இடங்களுக்கு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

B.T. Teachers of 'B' Wing Schools

* 254 Q.—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that B.T teachers of the 'B' wing schools appointed after 1-4-1970 but in service as on 3-3-1973 are ousted from service in spite of a specific G.O. providing for the regularisation of those teachers; and

(b) if so, the reason therefor?

‘B’ பிரிவு பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்கள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்களும், ஆனால், 3—3—1973 அன்றுள்ளபடி பணியிலுள்ளவர்களுமான ‘B’ பிரிவு பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களை முறைப்படுத்துவதற்கு வகை செய்யக்கூடிய குறிப்பான அரசு ஆணை வெளியிடப்பட்டிருந்தும் கூட அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Repair Works of the Government School Buildings

* 255. Q—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to question No. 173, on 3–3–1973:

(a) whether any decision has been taken on the resolution sent by the Kanyakumari District Development Council requesting that a separate Engineer should be appointed to undertake the repair works of the Government school buildings in that District; and

(b) if so, the details thereof?

அரசுப் பள்ளிக்கூடங்களைப் பழுது பார்த்தல்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற மேலவையில் 3—3—1973-ஆம் நாளன்று வினா எண் 173-க்கு அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசுப் பள்ளிக் கட்டிடங்களைப் பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ள தனிப்பொறியாளர் நியமிக்க வேண்டுமென்று அம் மாவட்ட அபிவிருத்தி மன்றம் அனுப்பிய தீர்மானத்தின் மீது முடிவு ஏதும் எடுக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?